NOC

/பதிவஞ்சலில்/

அனுப்புநர்

திரு.சோ.செல்வவிநாயகம்,
எம்.எஸ்ஸி.,எம்.எட்.,எம்பில்.,
மாவட்டக்கல்வி அலுவலர்(பொ)
(தனியார் பள்ளிகள்)
அரியலூர்.

பெறுநர்

தனியார் பள்ளிகள் இயக்குநர்,
தனியார் பள்ளிகள் இயக்ககம்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை-06.

ந.க.எண்.0001/அ1/2024 நாள்.09.02.2024

பொருள்: தடையின்மைச்சான்று மற்றும் தொடர் அங்கீகாரம்-அரியலூர் மாவட்டம்-பிரான்ஸ் சுலூஸ் ஸ்கூல் ஆப் எக்சலன்ஸ் சி.பி.எஸ்.இ பள்ளி வரதராஜன் பேட்டை-9 மற்றும் 10 ஆம் வகுப்பு துவங்க தடையின்மைச் சான்று (NOC) மற்றும் தொடர் அங்கீகாரம் கோரும் கருத்துருக்கள், பள்ளி பார்வை அறிக்கை அனுப்புதல்-சார்பு.

பார்வை:

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களின் ந.க.எண்.005337/G2-S2/2022 நாள். 09.04.2022.
2. தாளாளர், பிரான்ஸ் சுலூஸ் ஸ்கூல் ஆப் எக்சலன்ஸ் சி.பி.எஸ்.இ. பள்ளி வரதராஜன்பேட்டை என்பாரது கருத்துருக்கள்.
3. பள்ளிப் பார்வை அறிக்கை.
4. சம்மந்தப்பட்ட ஆவணங்கள்.

-------

அரியலூர் மாவட்டம், வரதராஜன்பேட்டை பிரான்ஸ் சுலூஸ் ஸ்கூல் ஆப் எக்சலன்ஸ் சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு 2023-24 ஆம் கல்வி ஆண்டில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு துவங்க தடையின்மைச்சான்று (NOC) மற்றும் தொடர் அங்கீகாரம் கோரும் கருத்துருக்கள் பார்வை 2இல் காணும் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்ட கீழ்க்காணும் விவரம் அறியப்பட்டது.

பார்வை 1இல் கண்டுள்ளவாறு 31.05.2024 முடிய Pre-KG முதல் VIII ஆம் வகுப்பு முடிய Certificate Recognition மற்றும் No Objection Certificate வழங்கப்பட்டுள்ளது. அங்கீகாரக் கட்டணமாக ரூ. 2000/- தரம் உயர்த்தலுக்கான கட்டணம் 10,000/- ஆய்வுக் கட்டணமாக ரூ.6000/- உரிய கணக்கில் செலுத்தி செலுத்துச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளன. கட்டட உறுதிச்சான்று 01.06.2022 முதல் 31.05.2025 வரை மற்றும் கட்டட உரிமம் சான்று 01.06.2022 முதல் 31.05.2025 வரை பெறப்பட்டுள்ளது. 600 நபர்கள் கல்வி பயில தகுதிபாடு உள்ளது.

/த/பி/ப/பா/

சுகாதாரச்சான்று, தீயணைப்புத்துறை தடையின்மைச் சான்று பெறப்பட்டு இணைக்கபபட்டுள்ளது. நகர் ஊரமைப்புத்துறை மூலம் கட்டடம் கட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அறக்கட்டளை நிதியாக ரூ.3,00,000/- மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளை பெயரில் 33 ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்தம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது. 2023-24 ஆம் கல்வி ஆண்டில் எல்.கே.ஜி. முதல் 9 ஆம் வகுப்பு முடிய 350 மாணாக்கர்கள் கல்வி பயிகின்றனர். தாளாளரால் உரிய உறுதிமொழிச்சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பள்ளிக்கு 2023-24 ஆம் கல்வியாண்டில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு துவங்க தடையின்மைச்சான்று மற்றும் தொடர் அங்கீகாரம் கோரும் கருத்துருக்கள் பள்ளிப்பார்வை அறிக்கை இத்துடன் இணைத்து பணிந்தனுப்பிவைக்கிறேன்.

மாவட்டக்கல்வி அலுவலர்(பொ)
(தனியார் பள்ளிகள்)
அரியலூர்.

இணைப்பு

1. NOC மற்றும் Certificate of Recognition கோரும் கருத்துரு
2. பள்ளிப்பார்வை அறிக்கை

நகல்

தாளாளர்,
பிரான்ஸ் சுலூஸ் ஸ்கூல் ஆப் எக்சலன்ஸ் சி.பி.எஸ்.இ பள்ளி,
தொன்போஸ்கோ தெரு,
வரதராஜன் பேட்டை ,
ஆண்டிமடம் (வட்டம்)
அரியலூர் (மாவட்டம்) 621 805.

CORRESPONDENT
FRANS SCHLOOZ SCHOOL OF EXCELLENCE (CBSE)
VARADARAJANPET - 621 805
ARIYALUR DISTRICT.

PRINCIPAL
FRANS SCHLOOZ SCHOOL OF EXCELLENCE (CBSE)
VARADARAJANPET - 621 805
ARIYALUR DISTRICT.